பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
இளைநூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 4 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 10 26-07-94 புதன்கிழமை ஓசை 158

## அதிபர்கள் நியமனம் குறித்து மாகாண அமைச்சிற்கு அறிவுறுத்து

பாடசாலைகளுக்கு அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பகுதித் தலைவர் ஆகியோர் களை நியமிப்பது தொடர்பாக, கல்விச் சேவைச் சபை, மாகாண கல்வி அமைச்சுகளுக்கு சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இதன்படி, தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 1ஆம், அல்லது 2ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களும், பிரதி அதிபர்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 2ஆம் வகுப்பு அல்லது (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வைத்தியசாலை மீது இராணுவம் எறிகணை தாக்குதல்!

## சத்திரசிகிச்சைப் பிரிவினுள் புகுந்தது

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு ஏவிய எறிகணைகளில் ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவில் விழ்ந்தது. இவ் எறிகணை வெடிக்காமையினால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஏவப்பட்ட எறிகணை கூரைப்பகுதி யூடாகப் புகுந்து சுவர், நிலம் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளது.

மண்டைதீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர், யாழ். போதனா வைத்தியசாலை மீது நேற்று முன் தினமிரவு இவ் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பகுதிக்குள் யாழ். போதனா வைத்தியசாலை மீது இரவு 9-30 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மண்டைதீவுப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட இவ் எறிகணை யாழ். போதனாவைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் களத்தின் கூரையைப் பிய்த்துக் கொண்டு உட்புகுந்ததுடன் உள்ளே அமைக்கப்பட்டிருந்த சுவரைத்துளைத்துக்கொண்டு சென்று எதிர்ச் சுவரில் மோதியது. எனினும் இவ் எறிகணை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவை தலைமையகத்திற்கு தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை மீது நேற்று முன் தினம் இரவு சிறிலங்கா படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச செஞ்சிலு

சாலைப் பகுதிக்கு நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைக் குழுவினர் நிலைமையை நேரில் அவதானித்து தமது கொழும்பு தலைமை

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## 'பிளாம்பயனை' நேரடியாக பரு. துறை வருவிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலான "பிளாம்பயன்" கப்பலை நேரடியாக பருத்தித்துறைக்கு கொண்டுவர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரியவருகின்றது.

இக் கப்பல் திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையே நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றது.

## அராலிக் கடற்பரப்பில் மீனவர் மீது தாக்குதல்



போதனா வைத்திய சாலையில் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட எறிகணை



பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அறிவித்துள்ளது-

சம்பவம் நடைபெற்ற யாழ். போதனா வைத்திய [...] தமது கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு இது பற்றி விபரமாக அறிவித்துள்ளனர் என தெரிய வருகிறது-

(பா), (நி)

## பாதுகாப்பு அமைச்சுடன் செஞ்சிலுவையினர் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதிமீது நேற்று முன்தினம் சிறிலங்கா படையினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமை அலுவலகம், சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேசவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப்பிற்கு உட்பட்டுள்ள யாழ்.போதனா வைத்தியசாலை மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறித்து இப் பேச்சுக்கள் நடைபெறவுள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சுகாதார அமைச்சுக்கு பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் படையினரால் யாழ். போதனா மருத்துவமனை மீது நடாத்தப்பட்ட எறிகணைத்தாக்குதல் குறித்து சுகாதார மகளிர் விவகார போதனா வைத்தியசாலைகள் அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மேற்படி விடயம் குறித்து அவசர வானொலிச் செய்தி ஒன்றை நேற்றுக்காலை மேற்படி அமைச்சுக்கு அனுப்பி வைத்தார்.

இவ் விடயம் குறித்து மேற்படி அமைச்சு மேலதிக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிய வருகிறது.

## சிறிலங்கா அரச படைகளின் காட்டு மிராண்டித்தனம்

### நோயாளர் நலன்புரிச் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனை மீது நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா படையினரால் நடாத்தப்பட்ட எறிகணை வீச்சு குறித்து நோயாளர் நலன்புரிச்சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந் நிகழ்வானது இம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும்நோயாளர்களை உளவியல் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளதுடன் எறிகணை வீச்சு குண்டு வீச்சுக்களினால் காயமடைந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் நோயாளர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.

இது போன்ற காட்டு மிராண்டித்தனமான அநாகரிகமான செயற்பாடுகளினால் ஏதுமறியாத நோயாளர்கள் பாதிக்கப்படுவதை நோயாளர் நலன்புரிச் சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## மீனவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அராலிக் கடற் பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சிறிலங்காப் படையினர் 50 கலிபர்த் தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர்.

நேற்று அதிகாலை அராலிக் கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி தீவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் படகுகளில் வந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

இதனை அடுத்து மீனவர் அவசர அவசரமாக பீதியுடன் தொழிலைவிட்டு கரைவந்து சேர்ந்தனர் என தெரிவிக்கப்பட்டது.

(பா, நி)

ஈடுபட்டுவருகின்றது.

அதேவேளை திருகோணமலையில் இருந்து நோயாளருடன் புறப்படும் இக் கப்பல் நேரடியாக காங்கேசன் துறைக்கு அழைக்கப்பட்டு படையினரின் சோதனையை முடித்துக் கொண்டே பருத்தித் துறைக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டு வருகின்றது.

எனவேஇந் நடவடிக்கையைத்தவிர்த்து நேரடியாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவை கொல்லவுள்ளவர் கொழும்பு ஹோட்டலில் தங்கவைப்பு

சந்திரிகாவை கொலை செய்ய கூலிக்கு அமர்த்தப்பட்ட நபர் கொழும்பு இன்ரகொன்றினன்ரல் ஹோட்டலில் 816ஆம் இலக்க அறையில் தங்கியிருப்பதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் பிரதமராக பதவி ஏற்றால் இவரைத் தீர்த்துக்கட்டவே இக் கொலை நபர் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி நபர் சிவில் உடையில் பொலிஸ் பாதுகாப்புடன் தங்கியிருப்பதாகவும் இவர் வாழைத்தோட்டம் பகுதியில் வசித்தவர் என்றும் இவர் பிரபல கிரிமினல் எனவும் கூறப்படுகிறது.

### வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கவிடாது

## பொலிஸ் அதிகாரிகள் மீது ஐ.தே.கவினர் அழுத்தம்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 620 முறைப்பாடுகள் தேர்தல் ஆணையாளருக்கு கிடைத்துள்ளன, ஆளும் ஐ. தே. க அரசியல்வாதிகளால் கொடுக்கப்படும் அழுத்தம் காரணமாக தேர்தல் தொடர்பான வன்முறைகளுக்கு எதிராக தம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என மாவட்ட மாகாண பொலிஸ் நிலையங்களிலிருந்து தேர்தல் ஆணையகத்திற்கும்பொலிஸ் தலைமையகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகபத்திரிகையாளரான லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

தற்போதைய காபந்து அமைச்சர்கள் அனைவருமே தங்கள் எதிராளிகளுக்கு எதிராக பொலிஸ் மீதும் நிருவாகம் மீதும் அழுத்தம் கொடுக்கின்றனர். இவ்வாறு வன்முறைகள் தொடர்ந்தால் அடுத்த சில வாரங்களில் வன்முறைகள் பெருகி தேர்தலும் பாதிக்கப்படலாம் என அவதானிகள் ஐயமுறுவதாகவும் லூசியன் ராஜகருணநாயக்கா தெரிவித்தார்.

## எதிரணி ஆதரவாளர் அமைச்சர்களால் மிரட்டல்

(கொழும்பு)

ஐ. தே. க. அமைச்சர்கள் பலர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதலை நடத்துவதுடன் கொலை செய்யப் போவதாக மிரட்டியும் வருவதாக பல எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

துகம்கெதர பகுதிகளில்

(4ஆம் பக்கம் பார்க்க)



சுவரில் எறிகணை ஏற்படுத்திய துளை

## சுதந்திர மாணவர் அமைப்பு பொ. ஐ. முவுக்கு ஆதரவு

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தனது முழுமையான ஆதரவை வழங்கப்போவதாக சுதந்திர மாணவ அமைப்பு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது இதற்கான காரணங்களை மக்களுக்கு தெளிவுபடுத்துமுகமாக பொரள்ளை நகரில் கொள்கை விளக்க கூட்டம் ஒன்றையும் நேற்று நடத்தியுள்ளது.

இது போன்று நாடுமுழுவதும் தமது கொள்கை விளக்கக் கூட்டங்களை நடத்த இருப்பதாக அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## விமானப் படைக்கு மேலும் ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படைக்கு தற்போது ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது. விமான ஓட்டுனர் பதவிக்கும் விமான பொறியியல் தொழில் நுட்பவியலாளர் பதவிக்கும் ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கத்தி வெட்டினால் வாய் கிழிந்தது

(கொழும்பு)

இரு கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவரின் வாயை மற்றைய கட்சியைச் சேர்ந்த ஒருவர் வெட்டியுள்ளார். இச் சம்பவம் மாத்தளை மாவட்டத்தில் உள்ள முவந்தெனிய என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய யூன் மாத, முதல் இரண்டுவார நிவாரண உலர் உணவுப் பொருட்கள் தற்போது சங்க நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன. நிவாரண முத்திரை அடிக்கட்டை மூலம் வழங்கப்படும் இப்பொருட்களை ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பாவனையாளர்களுக்கு மேற்படி சங்க பதில் பொது முகாமையாளர் செல்வி செல்வவதனா அறிவித்துள்ளார். (22)

## கட்டுப்பாடுகள் விதிப்பு

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின் போது வாக்குச்சாவடிக்குள் ஒருகட்சியின் வேட்பாளர் ஒரு முறை மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும்எனவும், வாக்காளர்கள் வாக்களிப்பு நேரத்தில் வேறு எவரும் அனுமதிக்கப்படக்கூடாதுஎனவும், பார்சல்கள், பைகள் எதுவும் வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கப்படக்கூடாது எனவும் தேர்தல் ஆணையாளர் பிறப்பித்துள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த உற்சவம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

புலோலிஅருள்மிகுமந்திகை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 25-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. கிரியாகிரமஜோதி தி. மாணிக்கவாசகக் குருக்கள் உற்சவங்களைநடாத்திவருகின்றார். எதிர்வரும் 9-ம் திகதி ஆடிப்பூரத்தினத்தன்று தீர்த்தத் திருவிழா நடைபெறுகின்றது. உற்சவகாலங்களில் தினமும்


சிறந்த இன மாடுகள்

**கூறு விற்பனை**

சிறந்த யேசிக் கலப்பு இனப் பாற்பசுக்களும், முதிர் நாகு கன்றுகளும் விற்பனைக்குள்ளன.

கூறுவிற்பனை நடைபெறும் --

நாள்: 29-07-1994

நேரம்: காலை 10.00 மணி

இடம்: திருநெல்வேலிப் பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி-9984)



**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

யாழ். மாவட்டம்

**பொது நிர்வாக சபைக் கூட்டம்**

இடம்:- BECON கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்

காலம்:- 27.07.94 (புதன்) பி.ப. 4.00மணி.

சகல கோட்டங்களின் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

பொதுச்செயலாளர்

யாழ். மாவட்டம்

(சி 9985)


**45-ம் நாள் நினைவஞ்சலி**

**அந்தியேட்டி கிரியை அழைப்பு**

தோற்றம்
29-12-73

மறைவு
12-6 94



**செல்வன் நடேஸ் பிறேமானந்தன்**

நீங்கள் எம்மைவிட்டு சென்றாலும்
உமது குரல் எமது சிந்தனையில் இருந்து
இறக்கப்போவது இல்லையே இல்லை.
வெண சங்கு சுட்டாலும் வெண்மை தரும்
உன் இலட்சியம் வானம் உள்ளவரைநிலைகொள்ளும்
கண்ணுக்குள் மணிபோல உள்ருக்குள்

## அரசாங்க ஊழியர்களின் இடமாற்றங்கள் ரத்து

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் என்பவற்றை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் மாத முடிவு வரை அரசாங்க ஊழியர்களின் சகல இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். விஜயதாசா சகல அமைச்சுக்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் ஆகஸ்ட் 8ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் அரசாங்க ஊழியர்களின் சகல இடமாற்றங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.க. தோற்க வேண்டும் பொ.மு. போக்கு சரியல்ல

- விக்கிரமபாகு கருணாரத்னா

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியின் தற்போதைய போக்கை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். அதேசமயம் ஐ தே கவினர் தோல்வியடைவதற்கான சகல முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா தெரிவித்தார். கட்சியின் தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக விளக்குவதற்காக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பு, வன்னி ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டுமே நவசமசமாஜக்கட்சிபோட்டியிடுகின்றது. எமதுகட்சிக்கு ஏனைய இடங்களில் செல்வாக்கு இல்லை என்பது இதன் பொருளல்ல எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.தே.க தோல்வியுறும் என்பது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது. புதிய யுகமொன்றை எதிர்நோக்கும் மக்கள் சந்திரிகாவின் தலைமையிலான பொ. ஐ. முயின் பின் ஒன்று சேர்ந்திருப்பது உண்மையே.

ஆனால் மக்கள் விரும்பாத திறந்த பொருளாதாரம், தனியார் மயம் ஆகியவற்றை முன்னணி ஆதரிப்பதோடு, வடக்கு, கிழக்கு யுத்தம், நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி முறை நீக்கம் ஆகியவை குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலைப்பாட்டை கடைப்பிடிக்கிறது.

இதனால் தேர்தலின் பின்னர் ஏற்படும் விளைவுகளுக்கு எதிராக மக்கள் எழுச்சியை சமாளிக்கும் அளவுக்கு தலைமைதாங்கும் சக்தி பொ ஐ. முவிற்கு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

## தேர்தலுக்கு முன் பின்னாக பதற்றம் ஏற்படுவதுவழக்கம்

- பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தேர்தல் போன்ற எந்தப் பதற்ற நிலையிலும் பொலிஸ் நிலையங்களுக்கு ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள போது நடமாடுவதற்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுவது வழக்கமானதே ஆகும். இவ்வாறு தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பொலிஸ்மா அதிபர் இக்னேசியஸ் தனகரத்தினம் கூறியுள்ளார்.

பொதுமக்கள் கூட்டணியின் பிரதித்தலைவியும், மேல் மாகாண முதல்வருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க வெளியிட்டதாகக் கூறப்பட்டு பத்திரிகைகளில் வெளியான அறிக்கை தொடர்பாக பதிலளித்த அவர் மேலும் கூறுகையில், தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் பதற்ற நிலை ஏற்படுவது வழக்கமானதாகும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் சட்ட விதிகளைக் கடுமையாக அமுல் செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் பிராங்டிசில்வா உத்தரவிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கு தீர்வு

## நினைவு கூருகின்றோம்...

**26-07-1994..**

1983-ம் ஆண்டு வெலிக்கடைச்சிறையில் சிங்களக் காடையர்களினால் தாக்கப்பட்டு இதே தினம் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

★ **சிவானந்தராசா** (சித்திரவேல் சிவானந்தராசா - எல். பி. 03 - மூதூர் - திருமலை)

1986-ம் ஆண்டு அம்பாறை - தாமரைக்குளம் பகுதியிற் சிறிலங்கா அதிரடிப்படையினர் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**பவான்** (கிருஷ்ணபிள்ளை சுவேந்திரராஜா - தம்பிலுவில் - அம்பாறை)

1987-ம் ஆண்டு அச்சுவேலிப் பகுதியிற் பாதுகாப்பு அரண் அமைக்கும் பணியில் ஈடுபடும்போது சிறிலங்கா இராணுவத்தினர் குறிபார்த்து சுட்டதில் வீரச்சாவெய்திய,

**காந்தி-கார்த்திக்** (மைனா கார்த்தீஸ்வரன் - கண்டி - மலையகம்)

அச்சுவேலிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988-ம் ஆண்டு சாவகச்சேரி - மட்டுவில் தெற்கில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய,

**கண்ணன்** (நமசிவாயம் நற்குணராசா-பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி - யாழ்)

1989-ம் ஆண்டு அம்பனையில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**கனகரத்தினம் ரவீந்திரன்** (தெல்லிப்பழை)

இதே தினம் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியரான தமிழ்ப் பொதுமகன். நயினாதீவு சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழிளைஞர்கள். பருத்தித்துறை ஓராம்கட்டைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள். சுதுமலையில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள். பருத்தித்துறையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த இருதயக் கல்லூரி மாணவன்.

1990-ம் ஆண்டு யாழ் - மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். அன்ரனி-கமீந்** (சின்னத்துரை இராசலிங்கம் - அச்சுவேலி தெற்கு - யாழ்)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட இளைஞன் உட்பட செங்கலடியைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆனையிறவில் ஆ. க. வெ. நடவடிக்கையின்போது சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வீரவன்** (சிவன் சந்திரன் - சீனன்குடா, கப்பல்துறை - திருமலை)

**லெப். மணிவண்ணன்** (மேரியோசப் பிரான்சிஸ் சேவியர் - அரிப்பு, முருங்கன் - மன்னார்)

திருமலை - பேராற்றுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**பொனி** (சின்னத்தம்பி மோகனதாஸ் - 5-ம் வட்டாரம், திரியாய் - திருமலை)

1992 ம் ஆண்டு மட்டு - தாழங்குடாச்சந்தியில்

திருவிழா நடைபெறுகின்றது. உற்சவகாலங்களில் தினமும் சிவ ஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தொடர் சமய அருளுரை வழங்கி வருகிறார். (25)

### கருத்தரங்கு

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கணிதத்தில் அடிப்படை அறிவைப் பெற ஊக்குவித்தலுக்கான மாதிரி வழிமுறை என்பது பற்றிய கருத்தரங்கு, இன்று மாலை மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண கல்வி வலயம் இரண்டின் விஞ்ஞான பாட உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கருத்துரை வழங்கவுள்ளார்.

### இலட்சார்ச்சனை

(கொழும் த்துறை)

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீசந்திர சேகரர் விநாயகர் கோவிலில் வருடாந்த இலட்சார்ச்சனை பூசைவழிபாடுகளுடன் கடந்த 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறுகின்றது.

இன்று 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 108 விசேட சங்காபிஷேகம் பூசை. இலட்சார்ச்சனையை அடுத்து பஞ்சமுக விநாயகர் வீதிவலம் வந்து அடியார்களுக்கு திருவருள் பாலிக்கவுள்ளார். (24)

### சைவநெறித் தேர்வு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்படும் இலங்கை சைவ நெறித்தேர்வு விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை எனவும், தேர்வு தினம் எதிர்வரும் 06-11-94 எனவும் பரீட்சைச்செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

---

உன் இலட்சியம் வானம் உள்ளவரை நிலைகொள்ளும்
கண்ணுக்குள் மணிபோல ஊருக்குள்
நாயகன்போல் வாழ்ந்தீரே பிறேமானந்தன்.

காளிகோவிலடி, உன் பிரிவால் துயருறும்
சிக்கந்தன்வீதி, அப்பா, அம்மா, சகோதரர்கள்
கொக்குவில் கிழக்கு. மற்றும் உற்றார், உறவினர்கள்,
26-7-94 (8933)

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 29 — 11 — 1969

உதிர்வு: 06 — 08 — 1993

**செல்வி விஜயரத்தினம் சுமதி**

**திதி: 26 - 07 - 94**

வானம் கறுத்து மின்னல் அடித்ததனால்
பூமி நனையப் பொழிவாய் மழையென
நாம் ஆவல் கொண்டிருந்த வேளை
இடியாய் இறங்கி எங்கள் இதயம்
பிளந்து போனாய் ஏங்குகின்றோம்
என்றும் உன் நினைவால்.

கரகத்தாம் புலம், அப்பா, அம்மா, சகோதரர்கள்,
கொற்றாவத்தை, குடும்பத்தினர்.
வல்வெட்டித்துறை. (8922)

---

# இனப்பிரச்சினைக்கு தீர்வு விரைவில் காண வேண்டும்

## - மகாநாயக்க தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சகல சமூகங்களையும் கலந்தாலோசித்து இணக்கமான தீர்வு ஒன்றை விரைவில் காண்பது அவசியமானதாகும் இவ்வாறு அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் வண தர்மகீர்த்தி குணரத்ன சந்தானந்த தேரர் கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரசின் தூதுக்குழுவொன்று அண்மையில் அவரைச் சந்தித்துப் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அப்போது மேலும் கூறுகையில், இதுவரை காலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணத்தவறியதால் வடக்கு - கிழக்கு பகுதியில் வாழும் மக்களும் பல்வேறு பகுதிகளில் அகதிகளாக வாழ்வோரும் பெரும் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது இதற்காக வருந்துகிறேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், மகாசங்கம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகவும் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு யுத்தத்தை முடிவுகட்டி பேச்சுவார்த்தை மூலம் இணக்கமான தீர்வு காணப்பட வேண்டுமென விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

### பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

தென் புலோலி புற்றளைச் சித்திவிநாயகா பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா புற்றளை விளையாட்டு மைதானத்தில் பெற்றோர் சங்கத்தலைவர் திரு சு திருச்செல்வம் தலைமையில் எதிர்வரும் சனியன்று நடைபெறுகின்றது. விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு வடமராட்சி கோட்டப் பொறுப்பாளர் செல்வி மலையரசி தமிழீழ தேசியக்கொடியையும், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. க. கமலசேகரம் மங்கள விளக்கையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். பருத்தித்துறை பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. தி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். பிரம்மஸ்ரீ சோ. விஜயரத்தினக் குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார். (25)

### உதைபந்தாட்டம்

யாழ்ப்பாண றோட்டரக்ற் சழகம், எஸ். எம் பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவுடன் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. 90 நிமிடம் நடைபெறும் இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யங் கென்றிஸ் அணி விளையாடவுள்ளது.

### மண்டலாபிஷேக பூர்த்தி விழா

(பருத்தித்துறை)

புலோலி வெள்ளுருவை நின்ற தாய்ப் (சின்னத்தாய்) பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகம் இன்று 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை சிவ ஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் தலைமையில் நடைபெறுகின்றது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார். சிவ ஞானவாருதி க. குமாரசாமிப் புலவர் திருமுறைப் பெருமை பற்றி சிறப்புரை நிகழ்த்துவார் (25)

---

**போனி** (சின்னத்தம்பி மோகனதாஸ் - 5-ம் வட்டாரம், திரியாய் - திருமலை)

1992 ம் ஆண்டு மட்டு - தாழங்குடாச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கிய போது வீரச்சாவெய்திய,

**துவாரகன்** (குணபால் சிறீதரன் - ஏறாவூர் - மட்டு)

இதே சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரரான,

**கணபதிப்பிள்ளை ஜெயசீலன்** (கிரான்குளம் - மட்டு)

1993 -ம் ஆண்டு மட்டு - வாகரை, கண்டலடிப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். வர்ணன்** (சீனித்தம்பி மகேந்திரன் - ஆரையம்பதி - மட்டு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9973)

---

## நன்றி கூறுகின்றோம்

எழுதுமட்டுவாழ் விழுபளை கண்ணகை அம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 22-07-1994 அன்று நடைபெற்ற தீர்த்தோற்சவத்துடன் இனிது நிறைவேறியது. இம் மகோற்சவம் அமைதியாக நடைபெற அனைத்து வழிகளிலும் உதவிய தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் அவர்கட்கும் ஆலய நிர்வாகப் பிரிவினருக்கும் மகோற்சவ காலங்களில் தேவையான பாதுகாப்பை வழங்கிய பளை காவல் துறையினருக்கும் மற்றும் ஏனைய வழிகளில் தொண்டாற்றிய உபயகாரர்கள், தொண்டர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையினர்
எழுதுமட்டுவாழ் விழுபளை அம்பாள்
ஆலயம்

25-07-1994 (8938)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

உன்னையே கொசுக்குமளவுக்கு உலையை
உன் எதிரிக்காய் எண்ணி மூட்டி விடாதே
-வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 26-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## தினேஷ்குணவர்த்தனாவின் எதிர்வு கூறல்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவின் அரசியல் எதிர்வு கூறலானது 'ஐக்கிய தேசியக்கட்சியோ அல்லது பொது ஜன ஐக்கிய முன்னணியோ யார் அடுத்து ஆட்சிக்கு வரினும் நாடு பிளவுபடுவது உறுதியாகும்' என்று தெரிவிக்கின்றது.

திரு. தினேஷ் குணவர்த்தனா இவ்வாறு தெரிவித்துள்ள அரசியல் ஆருடமானது தேர்தல்பிரசாரத்தின் ஒரு அங்கமாகவே வெளிவந்ததாகும் அவரின் அரசியற்கணிப்பின்படி ஐக்கிய தேசியக் கட்சியும் சரி, பொதுஜன ஐக்கிய முன்னணியும்சரி, தமது தேர்தல் லாபம் கருதி தமிழ் மக்களுடன் இரகசிய உடன்பாடு செய்வதன் மூலம் தமிழர் தாயகத்தைக் கொடுத்துவிடுவார்கள் என்பது எதிர்பார்க்கை ஆகும்.

ஆனால்தினேஷ் குணவர்த்தனாவின் கூற்றில் ஒரு பகுதியில் உண்மை இருப்பினும், ஒரு பகுதி கற்பனையில் அமைந்ததொரு மதிப்பீடே ஆகும். அத்தோடு அவர் தனது கூற்றுக்குக் கொடுக்க முற்படும் விளக்கமும் தவறானதாகும்.

ஐ தே.கவும், சரி பொது ஜன முன்னணியும் சரி தமிழ் மக்களுடன் தேர்தல் கூட்டு வைத்து அரசாங்கத்தைக் கைப்பற்றி அதிகாரத்தை பிடிக்க நினைக்கின்றார்களே ஒழிய ஒருபோதும் தமிழருக்கு உரிமைகளை வழங்கவோ அவர்களையும் சம அந்தஸ்துள்ள பிரஜைகள் என்று கருதவோ அவர்கள் தயாராக இல்லை.

தேர்தல் காலத்தில் போலியான வாக்குறுதிகளை வழங்குவதுடன் அவர்களின் கடமை முடிந்து விடுகின்றது. அவ்வாறான வாக்குறுதிகள் கூட சிங்களப் பெரும்பான்மையினரின் வாக்குகள் கிடைப்பதைப் பாதிக்காத வகையிலேயே அமைந்துள்ளன. தமிழருக்கு ஏதும் வழங்கிவிட்டதாக எதிர்த்தரப்பினர் பிரசாரம் செய்ய முடியாத அளவிற்கே கூறப்படுகின்றன.

இந்நிலையில் தேர்தல் காலங்களில் வழங்கும்

## புத்திஜீவிகள் மீது அச்சுறுத்தல் இன்னும் தொடர்கிறது

-விஜய விக்கிரமரட்ணா

(கொழும்பு)
கலைஞர்கள்மற்றும் புத்திஜீவிகளுக்கான அச்சுறுத்தல்கள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றமையையே கொழும்பில் கலைஞர்கள் மற்றும் இலக்கிய படைப்பாளிகள் மீது நடத்தப்பட்ட காடையர்களின் தாக்குதல் எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவரான விஜய விக்கிரமரட்ணாதெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வன்முறையிலிருந்து விடுபட்ட அரசியல் நெறி தோற்றுவிக்கப்படுவதற்கு எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி வாகை சூடுவதற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் கூட்டத்தில் வைத்து தாக்கப்பட்ட கண்டியைச் சேர்ந்த கலைஞர்களை சந்தித்துப் பேசியபின் அவர் இதனைத் தெரிவித்தார். சுயாதீன சங்கம் ஒன்றை அமைப்பதற்காக கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும் போது ஆயுதபாணிகளாகப் புகுந்த காடையர்கள் தாக்குதல் நடத்தியதை அறிந்து அதிர்ச்சி அடைந்திருப்பதாகவும், இந்தச் செயலை வன்மையாக கண்டிப்பதாகவும், குண்டர்களைப் பயன்படுத்தி புத்திஜீவிகளை அச்சுறுத்தும் அரசியல் வாதிகளின் செயல் இதன் மூலம் அம்பலமாகுவதாகவும்தெரிவித்தார்.

அத்துடன் ஐ தே. க. அரசியலில்கனவான் தன்மைபற்றிப் பேசுவது வெறும் வார்த்தை ஜாலமே என்பதும் தெளிவாகிறது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தோ. தொழிலாளருக்கு வீடு தொண்டா தேர்தல் குண்டு

-தனபால வீரசேகர

(கொழும்பு)
தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் சொந்தமாக்கப்படுவதாக அமைச்சர் தொண்டமான் கூறிவருவது ஒரு தேர்தல்குண்டு. இதுமிகப் பெரும் பொய், இவ்வாறு சுதந்திரக்கட்சியின் அமைப்பாளரும், தெரணியகலைத் தொகுதி வேட்பாளருமான தனபால வீரசேகர கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டுபேசியஅவர்மேலும் கூறுகையில் வடக்கு - கிழக்கு போருக்கு பொருத்தமான ஒருதீர்வு காணப்பட்டு இருந்தால் அதற்காக செலவிடப்படும் கோடிக் கணக்கானபணத்தை அரசாங்கம் மிச்சப்படுத்தியிருக்க முடியும் ஐ தே க தோல்வியுறுவதை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. மக்கள் இந்த ஆட்சியின் மீது மிகவும் விரக்தி அடைந்துள்ளனர். இந்த ஆட்சியை அகற்றுவதற்கான முதலாவது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

## மேடை சரிந்து தலையில் வீழ்வதுபோல் இருந்தது

### அன்ரனி பர்னான்டோ தெரிவிப்பு

(கொழும்பு)
''மேடை சரிந்த போது எல்லாம் எமது தலைமேல் வீழ்வது போலிருந்தது. யாரோ ஒருவர் மின் இணைப்பை துண்டித்து விட்டதால் நாம் மின்சாரத்தினால் தாக்கப்படுவதிலிருந்து தப்பி பிழைத்தோம்'' இவ்வாறு எம்பிலிப்பிட்டிய தொகுதியில் சிறிலங்கா ஜனாதிபதி அமர்ந்திருந்த மேடை சரிந்தது தொடர்பாக அச்சமயம் அம் மேடையில் அமர்ந்திருந்த ஜனாதிபதியின் பயண உதவிச் செயலாளர் அன்ரனி பர்னான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி பின்னர் அமைச்

பட்டார். எனினும் ஜனாதிபதி அங்கு உரையாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதையடுத்து ஒலி பெருக்கிவாகனம்ஒன்று அங்கு கொண்டுவரப்பட்டது என மேலும் அவர் தெரிவித்தார்.

அங்குஉரையாற்றியஜனாதிபதி டிங்கிரிபண்டா விஜேதுங்கா எம்பிலிப்பிட்டியவில் எலும்புக் கூடுகள் இருப்பதாக எதிரணியினர் கூறுகின்றனர். ஆனால் ஆடுமாடுகளின் எலும்புகளா அல்லது வேறு ஏதேனும் எலும்புகளா என்பது தெரியவில்லை கடந்தகாலத்தில் எண்ணிலடங்கா பொது மக்கள் பலியாகினர். அங்கு

## சந்திரிகாவின் பிள்ளைகள் லண்டன் பயணம்

(கொழும்பு)
திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் இரு பிள்ளைகள் கல்வியை தொடர்வதற்காக லண்டன் புறப்பட்டு சென்றுள்ளனர். இவர்களை சந்திரிகாவின் சகோதரியான சுனீத்திராவின் முன்னாள் கணவர் அழைத்துச் சென்றுள்ளார்.

## தங்கப்பதக்கம் அணிந்து கௌரவிப்பு

கைதடி நாவற்குழி தெற்கு கிராமியப் பாசறையின் நான்காவது மாதாந்த நிகழ்வில் கடந்த21ம் திகதிசிறப்பு அம்சமாக ஸ்ரீமகாவிஷ்ணு வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஒன்பது வரையான வகுப்புக்களில் முதலாம் தவணையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கும், க.பொ த. சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தரத்தில் கற்கின்றவர்களுக்கும் பரிசில்கள்வழங்கினர்.

செல்வி செல்வநாயகி வடிவேலு 1993 க. பொ. த. [சா/த] பெறுபேற்றின் அடிப்படையில் முன்னணியில் விளங்கியமையினால் அவருக்குப் பழைய மாணவர் சங்கம் தங்கப்பதக்கம் அணிந்து கௌரவித்தது கிரி கல்வி வளர்ச்சிக் கழகமும் பரீட்சையின் அடிப்படையில் பரிசில்களை மாணவர்களுக்கு வழங்கியது. இந் நிகழ்வில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் கருத்துரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## வன் செயல் எதுவும் தலையெடுக்க வேட்பாளர்கள் உதவக்கூடாது

- திருமதி சந்திரிகா குமாரணதுங்க

பொதுத் தேர்தலில், பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி காணும் ,என்பதற்கு தெளிவான அறிகுறிகள் தெரிகின்றன. வழமையான ஐ தே.க ஆதரவாளர் பலர் பொதுசன ஐக்கிய முன்னணியில் சேருவது குறித்து ஐ.தே. க. திகைப்பு அடைந்து போயுள்ளது. அதனால் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றிபெறின் ஐ தே க ஆதரவாளர்களுக்கு எதிராக வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடும் எனக் கதை பரப்பப்பட்டு வருகிறது.

இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் மேல் மாகாண முதல்வரும், கம்பஹா மாவட்ட தலைமை வேட்பாளருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

நிட்டம்புவ சங்கபோதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்

வெற்றி வாகை சூடும் முன்னணி சட்டம், அமைதி, ஒழுங்கு என்பவற்றைக் காப்பாற்றும் என்பதையும், வன் செயல் எதையும் தலையெடுக்க விடாது என்பதையும் நீங்கள் அனைவருக்கும் குறிப்பாக எமது அரசியல் எதிர்ப்பாளர்களுக்குஎடுத்துக்காட்ட வேண்டும். தேர்தல் முடிந்த உடனேயே நீங்கள் உங்கள் தேர்தல் பணிக் குழுக்களை, சமாதானப்பணிக் குழுக்களாக மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் சுலோகங்களை கோஷிக்காமலும்,எந்தவொரு வன்செயல் அல்லது பழிவாங்கல் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் அமைதியாக செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைதி நிலவ ஒத்துழைப்பு அளியுங்கள். தேர்தலில் தோல்வி காண்பவர்களையும் மரியாதையாக நடத்துங்கள். ஆதரவாளர்களை கட்டுப்படுத்துவது வேட்பாளர்களின் பொறுப்பு ஆகும்.

ஆதரவாளர்களை கட்டுப்படுத்தும் அளவுக்கு நீங்கள் செல்வாக்கு பெற்றிருக்காது விட்டால். நீங்கள் எம். பியாகவோ அமைச்சராகவோ வருவதற்கு தகுதியற்றவர்கள் என்பது உண்மையாகும். மதுபானம் அருந்தும் பழக்கம் உடையவர்கள் பிரசாரம் செய்யும் போதாவது அதனை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

## தனிப்பட்ட வெற்றியல்ல கட்சியின் வெற்றி அவசியம்

(கொழும்பு)
எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணியை வெற்றி பெறச் செய்வதே எமது குறிக்கோளாகும். இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் பொதுசன ஐக்கிய முன்னணி

## மூன்று கொத்து அரிசியை

இந்நிலையில் தேர்தல் காலங்களில் வழங்கும் வாக்குறுதிகள், உடன்பாடுகள் மூலம் தமிழருக்கென தனிநாடு ஒன்று உருவாகிவிடும் எனக் கூறுவது எதுவித ஆதாரமற்றதும், வரலாற்றிற்குப் புறம்பானதுமாகும். ஆனால்தினேஷ்குணவர்த்தனா இருகட்சிகளில் எவ வரினும் இலங்கை பிளவுபடுவது தவிர்க்க முடியாதது என்று கூறியதை யதார்த்தத்தின் அடிப்படையில் நோக்கினால் அதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஐ.தே.கவும், பொ. ஐ. முன்னணியும் கைக்கொள்ளும் இனவாதக் கொள்கை தொடருமானால், இலங்கை பிளவுபடுவதென்பது தவிர்க்க முடியாததொன்றே ஏனெனில் கடந்த காலத்தில் இக்கட்சிகள் மேற்கொண்ட நடவடிக்ககைகளே இனப்பிரச்சினை இன்றைய கட்டத்தை அடைவதற்குக் காரணமாகும்.

இந்நிலையில் இக்கட்சிகளில் எதுவாயினும் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றே கூறலாம். இந்நிலையில் தமிழர் போராட்டம் விரிவடைந்து தமிழீழம் உருவாவது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

இவ்வாறாக ஐ.தே.கவும், பொ. ஐ முன்னணியும் ஒருவகையில் தமிழர் தேசிய இனப் போராட்டத்திற்கு காரணமாக இருக்கும் வேளையில் மறுவளமாக இடையிடையில் வரும் தேர்தல்களின் போது அவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கைகள் தமிழர் தேசிய இனப்போராட்டத்தின் எழுச்சியையும், சீரான முன்னேற்றத்தையும் ஓரளவு பாதித்தே வருகின்றது.

அக்கட்சிகள் தேர்தல் காலங்களில் வழங்கும் போலியான வாக்குறுதிகளை சில தமிழ்க்கட்சிகள் தெரிந்தோ, தெரியமலோ தமது அபிலாசைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால் தேர்தல் கால வாக்குறுதிகள் போலியானவையெனத் தெரிந்தும் அவற்றில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றனர்இந்நிலையில் இக்கட்சிகள் இரண்டும் ஓரளவிற்கு தமிழ் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துவதோடு, விடுதலைப் போராட்டத்தில் தொய்வையும் உருவாக்கக் காரணமாகின்றன. இந்தவகையில்

ஐ. தே. கவும், பொ. ஐ. முன்னணியும் ஒருபுறத்தில் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு காரணமாக இருப்பினும், அதன் எழுச்சியை இடைக்கிடை குழப்பியும் விடுகின்றன. இது தமிழர் தரப்பை குறிப்பிடும்படியாகப் பாதித்தும்உள்ளது.

இந்நிலையில் தினேஷ்குணவர்த்தனா போன்றவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் தமிழரைப் பொறுத்து அதுபெரும் உதவியாக இருக்கும் ஐ தே. சவும் பொ. ஐ. முன்னணியும் தமிழர் மத்தியில் ஏற்படுத்தும் குழப்பங்கள் இலகுவில் தீர்க்கப்படும். மக்கள் தமதுநிலைப்பாட்டில் குழப்பம் அடையாது போராட்டத்தையே முழுமையாக நம்பியிருக்க வேண்டி வரும். இது போராட்டத்தை எழுச்சியுடன் முன்னெடுக்கஉதவும். இதுவே இருநாடுகள் விரைவில் உருவாக உதவியாகவும் இருக்கும்.

ஜனாதிபதி பின்னர் அமைச்சர்கள் நந்தா மத்யூ காமினி அத்துக்கோரள ஆகியோர் சகிதம் அருகிலுள்ள வீடுஒன்றிற்கு கூட்டிச்செல்லப் தில் எண்ணிலடங்கா பொது மக்கள் பலியாகினர். அங்குலம் ஒவ்வொன்றுக்கும் புதைகுழிகள் உள்ளன என்று கூறினார்.

## தங்காலையில் கட்சி மோதல் பொ.மு. ஆதரவாளர் கைது

(கொழும்பு)

தங்காலை பொலிஸ் பிரிவிலுள்ள மொரகட்டியாற கிராமத்தில் கடந்த செவ்வாயன்று இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே நடைபெற்ற கடும் மோதலில் சிலர் காயமடைந்தனர். படுகாயமுற்ற ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் ஐ தே.க மற்றும் பொ. ஐ முன்னணி ஆதரவாளர்களான ஒரே கிராமத்தைச் சேர்ந்த உறவுக்காரர்களுக்கிடையே இம் மோதல்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது நள்ளிரவு நேரத்தில் கத்தி, வாள், பொல்லு என்பன சகிதம் இம் மோதல்கள் நிகழ்ந்துள்ளன. படுகாயமுற்ற நிலையில் ஐ தே.க ஆதரவாளர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக பொது ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களான பத்துப் பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வேட்பாளரை வரவேற்ற வீட்டுக்காரர் மீது தாக்குதல்

### - அமைச்சர் அதிகாரியும் பங்கு

(கொழும்பு)

தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த பின் அனுராதபுரத்தின் ராஜாங்கனை எனுமிடத்தில் பொதுஜன ஐ. முன்னணி வேட்பாளரான பிரேமலால் திசாநாயக்கா என்பவருக்கு வரவேற்பளிப்பதற்காக ஒரு வீட்டருகில் ஏற்பாடு நடத்தினர். அச்சமயம் அங்கு வந்த அமைச்சர் ஏ. எம். எஸ் அதிகாரியும் பிரதேச சபை அமைச்சரான ரஜீவ் சூரியாராச்சி என்பவரும் அவ்வீட்டில் இருந்த ஒரு தும்புத்தடியைக் கொண்டு அங்கிருந்த சில பெண்களையும் வீட்டுக்காரரான ஆர். பி. ஜேமிஸ் என்பவரையும் கடுமையாகத் தாக்கினர். இதன் விளைவாக ஜேமிஸ் என்பவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், மேலும் தாக்குதலின் போது அவ்வீட்டில் பெண் ஒருவர் வைத்திருந்த இரண்டு வயதுக் குழந்தையொன்று கீழேவிழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பொ. ஐ. மு. ஆட்சியில் பாணின் விலை ரூபா 3.50

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் பாணின் விலை 3.50 ஆக குறைக்கப்படும். அமைச்சர்களின் எண்ணிக்கை 20 ஆக குறைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் நியமனம் குறித்து பரிசீலிக்கப்படும் என சந்திரிகா குமாரணதுங்கா தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு உறுதியான இறுதியான தீர்வைக்காண பொதுஜன ஐக்கிய முன்னணி திடசங்கற்பம் பூண்டுள்ளது சகலரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் எனவும் சந்திரிகா குறிப்பிட்டார்.

## மூன்று கொத்து அரிசியை எடுத்து சென்றாலும் குற்றம்

### சு. க. ஆட்சியில் நடந்தது குறித்து விபரிப்பு

(கொழும்பு)

1971-77ம் ஆண்டுக் காலப் பகுதியில் பிறந்தவர்கள் இதனை அறிய வேண்டும்; இப் பகுதி ஏழைப் பெண் ஒருவர் சாபக் கேடான அக்காலத்தில் மூன்று கொத்து அரிசியை எடுத்துக்கொண்டு இனத்தவர் ஒருவரின் வீட்டிற்கு செல்லும்போது கேகாலைப் பொலிசார் பிடித்து வழக்குத் தொடுத்தனர். வழக்குத் தினமன்று அப் பெண்ணுடன் நானும் கேகாலை சென்றேன்- மூன்று கொத்து அரிசி எடுத்துச் சென்ற குற்றத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டது.

ஒரு வாரத்தில் இரு நாட்கள் சோறு சாப்பிடக் கூடாது என்ற சட்டங்கள் அன்றுபிறப்பித்திருந்தார்கள்- ஏழைகளுக்குத் தான் இந்தச் சட்டம்- மந்திரிமார்கள் நன்றாகச் சாப்பிட்டார்கள்- விருந்து வைத்தார்கள்-

இவ்வாறு சட்டான கற்கோள என்னும் இடத்தில் நடைபெற்ற ஐ தே.க. பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய டி ஜே. பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ், திருமதி சந்திரிகாவின் ஆட்கள் சண்டித்தனத்தால் வாக்குகளைப் பெற எண்ணுகிறார்கள். கம்பஹாவில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்போன சுதந்திரக் கட்சியினர் மிருகங்களிலும் பார்க்க கேவலமாக நடந்து கொண்டார்கள். பச்சைசேட் தொப்பி போட்டவர்களை துரத்தித் துரத்தி அடித்தார்கள்- போக்குவரத்துப் பொலிசாரின் கட்டளைகளை மீறி வாகனங்களைக் கொண்டு சென்றார்கள்.

நீதியை நிலைநாட்ட வேண்டியவர்கள் இவ்வாறு நடந்தால் அவர்கள் நாட்டை எப்படி ஆளுவது? எனக் கேள்வி எழுப்பினார்.

## செய்தி தவறானதென அமைச்சு செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐ. தே க. தோல்வி தவிர்க்கமுடியாது என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவுக்கு தான் கூறியதாக வெளிவந்த செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என ஐ. தே கவின் முக்கியநபரும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளருமான விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று லண்டன் பி. பி. சி. சிங்கள சேவையில் அரசியல் விமர்சகரும் ராவய பத்திரிகை ஆசிரியருமான விக்டர் ஐவன் வெளியிட்ட இக் கருத்து முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என அவர்நேற்றுமுன்தினம் பி. பி. சி. சிங்களசேவைக்கு தெரிவித்தார்.

இச்செய்தி தவறு என மட்டுமே தான் கூறுவதாகவும் ஆனால் இதற்கான விளக்கத்தை தன்னால் வழங்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். ஆனால் தான் தனிப்பட்ட முறையில் தர்மசிறி சேனநாயக்காவை சந்தித்ததாகவும் ஆனால் அதில் நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பாக எந்த கருத்தையும் தான் வெளியிட விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

இதுபற்றி நேற்றுமுன்தினம் கருத்துவெளியிட்ட விமர்சகர் விக்டர்ஐவன் அதற்கு தகுந்த ஆதாரம் தம்மிடம் இருப்பதாகக் கூறினார்.

சமாஜக கட்சியின் தலைவரும் பொதுசன ஐக்கிய முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் தனிப்பட்ட நபர்களின் வெற்றியை விட கட்சியின் வெற்றியே முக்கியமானது. பல கட்சிகள் ஒன்றாக இணைந்து செயல்படும்போது கருத்து வேறுபாடுகள் தோன்றுவது இயற்கையே. ஆனால் அவற்றை நாம் பொருட்படுத்துவது கூடாது எனவும் தெரிவித்தார்.

## புலிகளின் குரல்

### நிகழ்ச்சி நிரல்

**1991-07-26**

**செவ்வாய் இரவு**

08. 01- ஊர்சுற்றும் ஒலிவாங்கி

08. 10- அறிந்து கொள்ளுங்கள் தகவற்களஞ்சியம்

08. 20- நலந்தானா- நிகழ்ச்சியில் ''திருமணமாகியும் குழந்தைப் பேறு இல்லாததற்கான காரணங்களும் ஆலோசனைகளும்''

08. 30- செய்திகள்

08. 40- கருத்துக்களம்

08. 50- கனமும் கானமும்- ''நன்றி உணர்வு''

**1991-07-27**

**புதன் காலை**

07. 02- மாவீரவணக்கம்

07. 15- நீங்கள்கேட்டவை

07. 30- செய்திகள்

07. 35- பத்திரிகைச் செய்திகள்

07. 40- நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகம்

ஈழநாதம்

26 7-9

## பாதுகாப்பை அதிகரிக்க சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தமக்கு பாதுகாப்பை அதிகரிக்குமாறும் சந்திரிகா குமாரணதுங்க பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது உயிருக்கு ஆபத்து விளைவிப்பதற்காக கிரிமினல் ஒருவர் அரசியல் வாதியொருவரால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என சந்திரிகா பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் இதனையடுத்து தற்போது அவருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## க. பொ. த. (சா.) பரீட்சை விண்ணப்ப முடிவு நீடிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் இறுதித் தினம் இம்மாதம் 18ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பலரின் வசதிக்காக தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### சோனியா காந்தி போலவே

## கணவரின் கொலை விபரம் கண்டறிய முற்பட்டேன்

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதற்காக திருமதி. சோனியா காந்தி முழு அளவிற் செயற்பட்டார். அவ்வாறே நானும் என் கணவர் கொலை தொடர்பான விபரங்களை கண்டறிவதில் உணர்வுபூர்வமான முறையை கைக்கொண்டேன். இவ்வாறு ஹேமா பிரேமதாச கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமது கணவரின் சுச்சரித்த இயக்கம் மூலம் நாடு முழுவதும் சென்று ஏழை மக்களின் நலன்களை கவனிக்கப் போவதாகவும் தாம் யார் மனதையும் புண்படுத்தும்படி செயற்படப்போவதில்லை எனவும் ஹேமா தெரிவித்தார்.

### பாதுகாப்பு

...என.

இவ்வாறான தாக்குதல்களை தவிர்க்கும்படி சம்பந்தப்பட்ட முகாம்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி) (பா)

யாழ். ஸ்ரீதரில்
தினசரி: 4.00 மணி

உயிராயுதம்

தினசரி: 6.00 சனி, ஞாயிறு: 10.30, 6.00

JURASSIC PARK

இவ்விரு திரைப்படங்களுடன்

# வன்முறைகளைத் தடுக்க ஓய்வுபெற்ற படையினர்

(கொழும்பு)

தேர்தலுக்குப்பின் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் வன்செயல்களைத் தடுப்பதற்கு ஓய்வு பெற்ற இராணுவத்தினரைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் மட்டும் எண்பதாயிரம் படையினர் நிலைகொண்டுள்ளனர் எனவும் இவர்களைத் தென்பகுதிக்கு அழைக்க முடியாதநிலை உள்ளதாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஓய்வுபெற்ற படையினரும், பொலிசாரும் ஒன்றிணைந்து வன்முறைகள் ஏற்படின் அவற்றுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடுவர் என அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# சுற்றிவளைத்த பொலிசார் மீது கற்பிட்டியில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

கற்பிட்டிப் பகுதியில் சிறப்புப் பொலிஸ் பிரிவினர் கடந்த 23-ம் திகதி சுற்றிவளைப்பு நடத்தியபோது அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது- இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட மூவர் சுற்றிவளைப்பை உடைத்துக் கொண்டு தப்பியோடியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் 'லங்காதீப' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்-

எனினும் இவர்கள் பின்னர் நீர்கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்-

இதேவேளை கற்பிட்டிக் கடற்கரையில் வைத்து செபஸ்த்தியான் பாஸ்கரன் அல்லது சிவநேசன் என அழைக்கப்படும் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது-

### யாழ்.

வெடிக்காத நிலையிலேயே காணப்பட்டது.

இவ் ஏறிகணை வெடித்திருந்தால் உயிர்ச்சேதங்கள் உட்பட பெரும் சேதங்கள் விளைந்திருக்கும். அத்துடன் பலர் காயமடைந்திருப்பர்.

மேலும் வைத்தியசாலைக் கட்டடமும், உபகரணங்களும் பலத்த சேதமடைந்திருக்கும்.

வெடிக்காத நிலையில் காணப்பட்ட மேற்படி எறிகணை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

எறிகணைவீச்சை தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலையின் சிகிச்சைக் களத்திலுள்ள நோயாளர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் பெரும் பதற்றமடைந்துள்ளனர். (பா), (நி)

## தேர்தல் கண்காணிப்பிற்கு விசேட காரியாலயம்

தேர்தல் கண்காணிப்புக்கென விசேட காரியாலயம் ஒன்று அமைக்கப்பட இருப்பதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீசில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் அழைப்பை ஏற்று வரும் சர்வதேச கண்காணிப்புக் குழுவினரின் அலுவலகமாகஇது இருக்கும்என்றும்அவர் மேலும்தெரிவித்தார். இக்கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகிக்க ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நீதிச் சபை, லோ ஏசியா, சார்க் நாடுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

கண்காணிப்புக் குழு அங்கத்தவர்கள் விரைவில் வருகை தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

### பிளாம் பயனை

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு இக்கப்பலை அனுமதிக்கும் முயற்கள் நடைபெற்று வருகின்றன.

எனினும் தற்சமயம் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் இரண்டொரு கிழமைகளில் தீர்க்கமான முடிவு ஒன்று கிடைக்...

## என்னை போட்டியிடவிடாது ஹேமா தடுக்க முயன்றார்

### ஐ.தே.க. வேட்பாளர் சங்கதாச தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நான் போட்டியிடுவதை எல்லா வகையிலும் ஹேமா பிரேமதாசா தடுத்தே வந்தார்- அவ்வேளையிலெல்லாம்சிறிசேன கூரேயே ஆதரவைத் தந்தார்- இவ்வாறு கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் சங்கதாச தெரிவித்...

பிரேமதாசாவுக்காக நான் சிறைகூட சென்றிருக்கிறேன்- ஹேமா அவருக்காக என்ன செய்தார்? மோசமான காலத்தில், அவருக்கு ஆபத்து எனத் தெரிந்தும் நுவரெலியாவுக்கு ஹேமா சென்றிருந்ததை வைத்தே அவரை அறியலாம் எனவும் சங்கதாசா பத்திரிகை பேட்டியொன்றின்போது...

## இரு மாகாண முதலமைச்சர் ஒரே மாவட்டத்தில் போட்டி

ஒரே தேர்தல் மாவட்டத்தில் இரு மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் போட்டியிடுகின்றனர்- மேல் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிகாவும், வட.மேல் மாகாண முதலமைச்சர் ஜி.எம். பிரேமச்சந்திராவுமே கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுபவர்கள் ஆவர்-

'குருநாகல் மாவட்டத்திலேயேநான்போட்டியிடவிரும்பினேன் அது கிடைக்காதபட்சத்தில் தேசியப் பட்டியலில் இடம்பெற விரும்பினேன்- ஆனால் கம்பஹாவில் போட்டியிடும்படி ஐ.தே.க. கேட்கவேநான்கம்பஹாவில்போட்டியிடுகிறேன்'' என பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்-

## கப்டன் முத்துவுக்கு இறுதி அஞ்சலி

கடந்த 23ஆம் திகதி எதிர்பாராத விபத்தொன்றில் வீரச்சாவடைந்த கப்டன் முத்து /அழகமுத்து (செல்லையா தவச்செல்வம், இணுவில் கிழக்கு, இணுவில்) என்னும் போராளியின் வித்துடல் இன்று காலை 8.00 மணிக்குப் பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற்றதும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

## குடிசை எரிந்து நாசம்

(தொல்புரம்)

எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கை குழந்தை தட்டி வீழ்த்தியதால் ஏற்பட்ட தீ விபத்தில் வீடு ஒன்று முற்றாக எரிந்து சாம்பராகியது.

நேற்று முன்தினம் இரவு 6-50 மணியளவில் இடம்பெற்ற இத் தீ விபத்தில் தொல்புரம் மேற்கைச் சேர்ந்த சின்னப்பொடி கணேசு என்பவரின் வீடு முற்றாக எரிந்தது. அதே வேளை குழந்தைக்கு தீக்காயம் எதுவுமின்றி காப்பாற்றப்பட்ட போதிலும், வீட்டினுள் அடங்கிய சகல தளபாடங்களும், உடுபுடவைகளும், பாத்திரப் பொருட்களும் முற்றாக எரிந்து சாம்பராகின. (41)

### வயிற்றோட்டத்தால் மரணம்

## வாள்வெட்டில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் சந்திக்கருகாமையில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

வாள் வெட்டுக்கு இலக்கானவர்களான பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த கருணாகரன் சுதாகரன் (வயது 24) பழம் றோட்டைச் சேர்ந்த நவரட்ணம் ஜெய்சங்கர் (வயது 23) ஆகிய இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி)

## ஆனையிறவில் எறிகணை வீச்சு

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் முகாமை அண்டிய பகுதிகளில் கடும் எறிகணைத் தாக்குதலும் கலிபர் தாக்குதல்களையும் நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் நடத்தினர்.

மேற்படி முகாமில் இருந்து ஏவப்பட்ட எறிகணைகள் இயக்கச்சி, மாசார் போன்ற பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை பராவெளிச்சமும் முகாம் பகுதியில் இருந்து பாய்சப்பட்டது. (86)

## விளையாட்டுப் போட்டி

நாயன்மார்கட்டு சிவபரன் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு நாயன்மார் கட்டு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

### அதிபர்கள்

3ஆம்வகுப்பு உத்தியோகத்தர்களும், உதவி அதிபர்களாக இலங்கைகல்வி நிர்வாகசேவையைச் சேர்ந்த 3ஆம் வகுப்பு உத்தியோகத்தர் அல்லது, இலங்கை அதிபர் சேவையின்

மான முடிவு ஒன்று கிடைக் குமென எதிர்பார்க்கப்படு கின்றது. (பா, நி)

டியிடும் சங்கதாச தெரிவித் துள்ளார்.

பேட்டியொன் றின்போது தெரிவித்தார்.


இவ்விரு திரைப்படங்களுடன்
நிதர்சனமும் தயாரித்து வழங்கிய

**போர் முரசு**

திரைப்படமும் காண்பிக்கப்படும்

(சி-9987)



பல்கலைக் கழக மாணவர்களுக்கான

**அறிவித்தல்**

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கான குழுபுகைப்படமெடுத்தல் நாளை 27-07-94 புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கலைப்பீட மைதானத்தில் நடைபெறும். அணிவீரர்கள் ஆயத்தத்துடன் சமுகமளிக்கவும்.

விளையாட்டு அவை
யாழ். பல்கலைக் கழகம்

(8939)



**வண்ணக் காலணிப் பூங்கா**

வாடிக்கையாளர்கள் விரும்பிக்கேட்ட
பெண்களுக்கேற்ற புதிய டிசைன்

**பாட்டா D.S.I மற்றும் பாதணிகள்!**

★ சில்வர் பொருட்கள்!
★ அன்பளிப்புப் பொருட்கள்!
★ அழகுசாதனப் பொருட்கள்!
★ புதிய சாறி புறோச்கள்!

உடன் நாடுங்கள்!
மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

இல. 315/C,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(8936)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# 31-ஆம் நினைவு நாள் அஞ்சலி

(36-ஆம் நாள்)



லெப். கதிரவன் / கோபு
பூபாலசிங்கம்-சதீஸ்குமார்

தோற்றம்: 06-09-69
வீரச்சாவு: 21-06-94



(31-ஆம் நாள்)



மு. பூபாலசிங்கம்

மண்ணில்: 21-05-27
விண்ணில்: 26-06-94

ஈருடலோருயிரானீரோ?

செந்தமிழர் தாயகத்தை காப்பதற்கே
முந்தி நின்று பகை முகத்தில் எதிரி வீழ
சிந்தனைகள், செயல் பலதும் புரிந்த கோபு (சதீஸ்குமார்)
வந்தொரு எரிதணலில் சேதி ஆனான் மாவீரன்
வரலாற்றின் விதையான சேதியோடு
தந்தை தவசீலன் பூபாலசிங்கம் தானும்
மைந்தன் வழி ஏகினனே மண்ணை விட்டு கண்ணீர்
மாலையென மனைவி மக்கள் கலங்க வைத்து
ஈருடலுமோருயிருமானோர்க்காக
இணையிலான் பொன்னடிகள் தொழுது நிற்போம்

சந்தனமாதா கோவிலடி,
பாண்டியன்தாழ்வு.

- குடும்பத்தினர்

(சி-9986)

## மரணம்

(வடமராட்சி)

ஒன்றரை வயதுச் சிறுவன் ஒருவன் வயிற்றோட்டத்திற்கு இலக்காகி நேற்று முன் தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரணமானார்.

வல்வெட்டித்துறை கொற்றாவத்தையைச் சேர்ந்த சத்தியநாதன் பிரசாந்த் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக பலியானார். (யோ)

## எதிரணி

ஐக்கிய தேசியக் கட்சி குண்டர்கள் பல வீடுகளை தாக்கிப் பாரிய சேதம் விளைவித்துள்ளதாகவும், அவ் வீடுகளில் இருந்த பலர் தாக்கப்பட்டதாகவும் அதில் ஒருவர் மரணம் அடைந்து விட்டதாகவும் முன்னாள் சுதந்திரக் கட்சி உறுப்பினர் மில்றோய் பெர்னாண்டோ பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் ஒரு சிரேஷ்ட அமைச்சரின் வேண்டுகோளின் பெயரில் அம் முறைப்பாடு பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபர்களும் நியமிக்கப்பட வேண்டும். பகுதித் தலைவர்களாக இலங்கை அதிபர் சேவையின் 1ஆம் தர அதிபர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஏபி பாடசாலைகளுக்கு அதிபர்களாக, இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த 2ஆம் வகுப்பு அல்லது 3ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களும், பிரதி அதிபர்களாக, இலங்கை கல்விநிர்வாகசேவை 3ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள், அல்லது இலங்கை அதிபர் சேவை முதலாந்தர அதிபர்களும் நியமிக்கப்பட வேண்டும். உதவி அதிபர்களாகஇலங்கைஅதிபர்சேவையின் 1ஆந்தர அல்லது தரம் 2 அதிபர்களும். பகுதித் தலைவர்களாக அதிபர் சேவையில் தரம் 2 அல்லது தரம் 3 அதிபர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

பி ஒன்று தர பாடசாலைகளுக்குஅதிபர்களாகஇலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த மூன்றாம் வகுப்பு உத்தியோகத்தர் அல்லது அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர், உதவி அதிபர்களாக அதிபர் சேவையில் முதலாந்தர அல்லது தரம் இரண்டு அதிபர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகநாதன் பரமேஸ்வரி

திருமதி சண்முகநாதன் பரமேஸ்வரி 25-07-94இல் காலமானார். அன்னார் இளைப்பாறிய P. W. D. ஓவர்சியர் ஐயாத்துரை சண்முகநாதனின் அன்பு மனைவியும், மலேசியன் பென்சனியர் தம்பு இளையாச்சியின் அன்புப் புதல்வியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-07-94 பிற்பகல் 2-00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லைகட்டி ஒழுங்கை,
சுன்னாகம்.

தகவல்
ஐ. சண்முகநாதன்

(8941)